

கோவில்பட்டி கிழக்கு மற்றும் மேற்கு நகரக் கழக நிர்வாகிகளுடன் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் கலந்துரையாடினார். உடன் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் அன்பழகன், கோவில்பட்டி நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, நகர் மன்ற உறுப்பினர்கள் கு.தவமணி, சுரேஷ், ஜாஸ்மின் லூர்து மேரி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் - நான்காண்டு சாதனை விளக்கக் கூட்டங்கள்

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!

தேனி, ஜூன் 21-

தேளி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன், எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் ஒன்றியம், நகரம், பேரூர் வாரியாக கீழ்க்கண்ட தேதிகளில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள். தொகுதி பார்வையாளர்கள் .மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர்,கழக செயலாளர்கள் சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பாகமுகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வ. எண் தேதி நேரம் ஒன்றியம், நகரம்,பேரூர் இடம் கழகப் பேச்சாளர்கள் 20.06.2025 மாலை 5.00 மணி போடிநாயக்கனூர் நகரம் வள்ளுவர் சிலை அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. போடி காமராஜ் இளம் பேச்சாளர் இ.முத்து செல்வம்

மாலை 5.30 மணி போடி நாயக்கனூர் கிழக்கு ஒன்றியம் கோடங்கிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. போடி காமராஜ் இளம் பேச்சாளர் இ.முத்து செல்வம் மாலை 6.00 மணி பூதிப்புரம் பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. போடி காமராஜ் இளம் பேச்சாளர் இ.முத்து செல்வம் 21.06.2025 மாலை 5.00 மணி பழனிசெட்டிபட்டி பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. கொள்கை பரப்பு துணை செயலாளர் கம்பம்.இரா.பாண்டியன் இளம் பேச்சாளர் சுருதி

மாலை 5.30 மணி தேனி வடக்கு ஒன்றியம் தாடிச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. கொள்கை பரப்பு துணை செயலாளர் கம்பம். இரா.பாண்டியன் இளம் பேச்சாளர் சுருதிமாலை 6.00 மணி வீரபாண்டி பேரூர் வ.உ.சி. சிலை அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. கொள்கை பரப்பு துணைசெயலாளர் கம்பம்.இரா.பாண்டியன் இளம் பேச்சாளர் சுருதி மாலை 6.30 மணி தேனி தெற்கு ஒன்றியம் கோட்டூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. கொள்கை பரப்பு துணை செயலாளர் கம்பம்.இரா.பாண்டியன் இளம் பேச்சாளர் சுருதி 22.06.2025 மாலை 5.00 மணி பெரியகுளம் நகரம் பழைய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் பாண்டித்துறை இளம் பேச்சாளர் சுருதி

மாலை 5.30 மணி தேனி வடக்கு நகரம் அல்லிநகரம் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் பாண்டித்துரை இளம் பேச்சாளர் சுருதி

மாலை 6.00 மணி தேனி தெற்கு நகரம் சமதர்மபுரம் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் பாண்டித்துரை இளம் பேச்சாளர் சுருதி

23.06.2025 மாலை 5.00 மணி கெங்குவார்பட்டி பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் போடி கலைச்செல்வன். இளம் பேச்சாளர் சுருதி

மாலை 5.30 மணி தேவதானப்பட்டி பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் போடி கலைச்செல்வன். இளம் பேச்சாளர் சுருதி

மாலை 6.00 மணி வடுகபட்டி பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் போடி கலைச்செல்வன். இளம் பேச்சாளர் சுருதி

மாலை 6.30 மணி பெரியகுளம் வடக்கு ஒன்றியம் அழகர் சாமிபுரம் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் போடி கலைச்செல்வன். இளம் பேச்சாளர் சுருதி

24.06.2025 மாலை 5.00 மணி பெரியகுளம் தெற்கு ஒன்றியம் ஜெயமங்கலம் பேருந்து நிறுத்தம் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர்சுருதி

மாலை 5.30 மணி தாமரைகுளம் பேரூர் வ.உ.சி. சிலை அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் சுருதி

மாலை 6.00 மணி தென்கரை பேரூர் முத்தாலம்மன் கோவில் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் சுருதி

25.06.2025 மாலை 5.00 மணி மார்கையன் கோட்டை பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் இ.முத்து செல்வம்

மாலை 5.30 மணி குச்சனூர் பேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் இ.முத்துசெல்வம்

மாலை 6.00 மணி சின்னமனூர் ஒன்றியம் எர்ணம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் இ.முத்துசெல்வம்

26.06.2025 மாலை 5.00 மணி மேலசொக்கநாதபுரம் பேரூர் வினோபாஜி நகர் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர்இ.முத்துசெல்வம்

மாலை 5.30 மணி போடி நாயக்கனூர் மேற்கு ஒன்றியம் அணைக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தம் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் இ.முத்துசெல்வம்

மாலை 6.00 மணி போடி மீனாட்சிபுரம் துரைராஜபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. தலைமை கழகப் பேச்சாளர் குமரி பிரபாகரன் இளம் பேச்சாளர் இ.முத்துசெல்வம்

இவ்வாறு தங்கதமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பெரம்பலூர் மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் பெரம்பலூர் மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அழகு நீலமேகம் அவர்கள் வேப்பூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், அழகு நீலமேகம் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;


பெரம்பலூர் மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, **ஜூன்** 23 **(திங்கட்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் பெரம்பலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



### தமிழ்நாடு மாம்பழ விவசாயிகளைப் பாதுகாப்பீர்!

# அரசியலமைப்பின் 301-வது பிரிவை நிலைநாட்ட உடனே தலையிட வேண்டும்!

## ஒன்றிய அரசுக்கு - டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூன் 21 -

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பெரும் நெருக்கடியில் உள்ளனர். வேலூரில் மட்டும் 5,710 ஹெக்டேர் நிலத்தில் ஆண்டுக்கு 46,000 டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இப்போது 40,000 டன் மாம்பழம் விற்கப்படாமல் வீணாகி, விவசாயிகள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடிக்கு முக்கிய காரணம், ஆந்திரப் பிரதேச அரசு, சித்தூர் மாவட்டத்தில் உள்ள பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாட்டு மாம்பழங்களை வாங்கத் தடை விதித்தது. இது இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை மீறும் செயல். இந்தப் பிரிவு, இந்தியா முழுவதும் வணிகம், வர்த்தகம், தொடர்பு ஆகியவற்றை சுதந்திரமாக நடத்த உரிமை அளிக்கிறது. ஆந்திர அரசின் இந்த அநீதியான முடிவு, விவசாயிகளின் வாழ்வை அழிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் பொருளாதார ஒற்றுமையையும் பாதிக்கிறது.

ஒன்றிய அரசு இந்தப் பிரச்சினையில் மௌனமாக இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. தமிழ்நாட்டு விவசாயிகளை இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்றவும், அரசியலமைப்பை நிலைநாட்டவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பிரச்சினையின் விவரங்கள்**

கடந்த 25 ஆண்டுகளாக, வேலூரைச் சேர்ந்த விவசாயிகள் 42,000 டன் மாம்பழங்களை சித்தூரில் உள்ள 34 பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு விற்று வந்தனர். சித்தூர் வெறும் 30 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆனால், ஆந்திர அரசு தமிழ்நாட்டு மாம்பழங்களை தடை செய்து, ஆந்திர விவசாயி களுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கிறது.

ஆந்திர அரசு ஒரு கிலோ மாம்பழத்திற்கு 4 ரூபாய் மானியமும், தொட்டாபுரி மாம்பழத்திற்கு குறைந்த பட்ச விலையாக 12 ரூபாய் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டு மாம்பழங்கள் எல்லையில் நிராகரிக்கப்படுகின்றன. இதனால், வேலூரில் மாம்பழங்கள் விற்கப்படாமல் குவிந்து, விலை குறைந்து விட்டது. திருப்பத்தூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களுக்கு மாம்பழங்களை எடுத்துச் செல்ல ஒரு டன்னுக்கு 1,2001,500 ரூபாய் செலவாகிறது. அங்கு ஒரு கிலோவுக்கு 5 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. வேலூரில் பழச்சாறு தொழிற்சாலைகள் இல்லாததும், பழைய கூட்டுறவு பழச்சாறு தொழிற்சாலை மூடப்பட்டதும் விவசாயிகளை மேலும் பாதிக்கிறது. இதனால், அவர்களின் உழைப்பு வீணாகி, குடும்பங்கள் நிர்க்கதியாக உள்ளன.

**301வது பிரிவு மீறலும், ஆந்திர அரசை கண்டித்தல்**

ஆந்திரப் பிரதேச அரசின் இந்த முடிவு, இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை மீறுவதாகும். இந்தப் பிரிவு, இந்தியா முழுவதும் மாநிலங்களுக்கு இடையேயும், மாநிலத்திற்குள்ளும் வணிகம், வர்த்தகம் சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்று உறுதி அளிக்கிறது. இது இந்தியாவின் பொருளாதார ஒற்றுமையை உறுதி செய்யும் முக்கிய பிரிவு. ஆனால், ஆந்திர அரசு, தமிழ்நாட்டு மாம்பழங்களை சித்தூர் தொழிற்சாலைகளுக்கு தடை செய்து, அரசியலமைப்பை மீறியுள்ளது. எல்லையில் விவசாயி களின் விவரங்களை சோதித்து, ஆந்திர விவசாயி களுக்கு மட்டும் அனுமதி அளிப்பது, தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு எதிரான பாகுபாடு.

இது விவசாயிகளின் வாழ்வை அழிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் ஒற்றுமையையும், மாநிலங்களுக்கு இடையேயான நல்லுறவையும் பாதிக்கிறது. 25 ஆண்டுகளாக தமிழ்நாட்டு விவசாயி கள் சித்தூர் தொழிற்சாலைகளுக்கு மாம்பழம் வழங்கி, இரு மாநிலங்களின் பொருளாதாரத்திற்கும் பங்களித்து வந்தனர். ஆனால், ஆந்திர அரசு, சுயநலத்திற்காக இந்த உறவை அழித்து விட்டது.

ஒன்றிய அரசின் மௌனம் மிகவும் ஏமாற்றமளிக்கிறது. இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு மத்திய வேளாண்மை அமைச்சகத்திற்கு உள்ளது. ஆனால், ஆந்திர அரசின் தவறான முடிவை எதிர்க்காமல், தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்காமல், ஒன்றிய அரசு மௌனமாக உள்ளது. இது 'விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்', 'ஆத்மநிர்பர் பாரத்', 'பிரதான் மந்திரி பயிர் காப்பீடு திட்டம்' போன்ற வாக்குறுதிகளுக்கு எதிரானது.

**தமிழ்நாடு அரசையும் வேலூர் மாவட்ட நிர்வாகத்தையும் பாராட்டுதல்**

ஆந்திர அரசின் அநீதியையும், ஒன்றிய அரசின் மௌனத்தையும் எதிர்கொண்டு, தமிழ்நாடு அரசு, முதலமைச்சரின் அற்புதமான தலைமையில், விவசாயிகளுக்கு ஆதரவாக தனித்து நிற்கிறது. தமிழ்நாடு அரசு, விவசாயி களின் நலனை முதன்மை யாகக் கருதி, பல திட்டங் களைச் செயல்படுத்தி வருகிறது.

வேலூர் மாவட்டத்திலிருந்து ஒரு உயர்மட்டக் குழு சித்தூருக்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவில் வேளாண்மை துணை இயக்குநர், வேளாண்மை அதிகாரிகள், தோட்டக்கலை அதிகாரி, துணை தாசில்தார், ஆர்.டி.ஓ. அதிகாரி ஆகியோர் இருந்தனர். இவர்கள் சித்தூர் மாவட்ட அதிகாரிகள் மற்றும் பழச்சாறு தொழிற்சாலைகளுடன் பேசி, முழு விவரங்களை அறிக்கையாக அளித்தனர். இந்த அறிக்கை, பிரச்சினையை மாநில மற்றும் ஒன்றிய அரசுக்கு எடுத்துச் செல்ல உதவியது.

ஒன்றிய அரசு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசின் முயற்சிகளை ஆதரிக்கவும், 301வது பிரிவை நிலைநாட்டவும், ஒன்றிய அரசு உடனடியாக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

1. மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை: தமிழ்நாடு மற்றும் ஆந்திர முதலமைச்சர்கள், வேளாண்மை அமைச்சர்களுடன் உடனடி கூட்டம் நடத்தி, தமிழ்நாட்டு மாம்பழங்களுக்கு சித்தூர் தொழிற்சாலைகளில் 1421 நாட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது 301வது பிரிவின் சுதந்திர வர்த்தக உரிமையை உறுதி செய்யும்.

2. நிதி உதவி: ஒரு கிலோ மாம்பழத்திற்கு 4 ரூபாய் மானியம், ஒரு விவசாயிக்கு 5,000 ரூபாய் நிவாரணம், மற்றும் போக்குவரத்து செலவுக்கு மானியம் வழங்க வேண்டும். இவை 10 நாட்களுக்குள் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

3.சந்தை ஆதரவு: NAFED மற்றும் APEDA மூலம் ஒரு கிலோ மாம்பழத்திற்கு 12 ரூபாய் குறைந்தபட்சவிலையில் மாம்பழங்களை வாங்க வேண்டும். வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூரில் தற்காலிக வாங்குதல் மையங்கள் அமைக்க வேண்டும்.

4.உள்கட்டமைப்பு மேம்பாடு: வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரியில் பழச்சாறு தொழிற்சாலைகள், குளிர்பதன கிடங்குகள் அமைக்க 500 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். கூட்டுறவு பழச்சாறு தொழிற்சாலைகளை மீண்டும் தொடங்க வேண்டும்.

5.தேசிய வர்த்தகக் கொள்கை: 301வது பிரிவை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களுக்கு இடையே விவசாய வர்த்தகத்தை ஒழுங்குபடுத்த ஒரு தேசிய கொள்கையை உருவாக்க வேண்டும். பாகுபாட்டைத் தடுக்க ஒரு நிரந்தர ஆணையம் அமைக்க வேண்டும்.

6.நலத் திட்டங்களில் சேர்க்கை: மாம்பழங்களை மதிய உணவுத் திட்டம், ICDS போன்ற திட்டங்களில் சேர்க்க வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு மாம்பழம் வழங்குவதை ஊக்குவிக்க வேண்டும்.

7.ஏற்றுமதி ஊக்குவிப்பு: தமிழ்நாட்டு மாம்பழங்களை ஆத்மநிர்பர் பாரத், மேக் இன் இந்தியா திட்டங்கள் மூலம் உலக சந்தையில் பிரபலப்படுத்த வேண்டும்.


8.விவசாயிகளுக்கு ஆதரவு: அறுவடை முறைகள், சந்தை விவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். புகார்களுக்கு ஒரு இலவச தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் உங்கள் தனிப்பட்ட கவனத்தையும், உடனடி நடவடிக்கையையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜூன் 21 (2009)



**தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**